[திரு. கே.டி. பச்சைமால்] [2013 அக்டோபர் 28

மேலும், இப்பொருள் தொடர்பான வழக்கு எண் W.P. No.*21783* of *2012* இன் மீது *30-08-2012* அன்று சென்னை, உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நல வாரியங்களில் பதிவு செய்ய, தொழிலாளர்களின் பதிவு விண்ணப்பங்களைத் தொழிற்சங்கங்கள் சமர்ப்பிக்க, நலத் திட்டக் கூறுகளில் வழிவகை செய்யப்படவில்லை என்பதனை உறுதி செய்துள்ளது.

மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்களில் தணிக்கை மேற்கொண்ட மாநில கணக்காயர் அலுவலக (Accountant General Office) தணிக்கைக் குழு மற்றும் உள்ளக தணிக்கைக் குழு (Chief Internal Audit & Statutory Boards) ஆகிய நிறுவனங்கள் மேற்கொண்ட தணிக்கையின்போது, தொழிற்சங்கங்கள் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட பதிவு மற்றும் கேட்பு மனுக்களுடன் போலி ஆவணங்கள் இணைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. அவ்வாறு தவறான நோக்குடன் பெறப்பட்ட கேட்பு மனுக்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீது தற்போது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த *153* தொழிற்சங்கங்கள் திட்டச் செயல்பாடுகளிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

எனவே, முறையான அமைப்புசாராத் தொழிலாளர்களை நல வாரியங்களில் பதிவு செய்வதற்கும், போலியான பதிவுகளைத் தவிர்ப்பதற்கும், சரியான பயனாளிகளுக்கு உதவித் தொகை சென்று சேர்வதை உறுதி செய்யவும், தொழிலாளர்கள் மற்றும் பயனாளிகள் நல வாரியங்களின் மாவட்ட அலுவலகங்களுக்கு நேரில் வருவது அத்தியாவசியமாகிறது. இதனை மாநில கணக்காயர் அலுவலக தணிக்கைக் குழுவினரும் வலியுறுத்தியுள்ளனர்.

கிராம நிருவாக அலுவலர் விசாரணை

அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்ய தொழிலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளரது பெயர், முகவரி, வயது, குடும்ப உறுப்பினர்கள் விவரம், ஈடுபட்டுள்ள தொழில் மற்றும் இவற்றிற்குச் சான்றாக தொழிலாளரால் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் உண்மைத்தன்மை ஆகிய விவரங்கள் கிராம நிருவாக அலுவலரால் சரிபார்க்கப்பட்டு அளிக்கப்படும் சான்றின்

2013 அக்டோபர் 28] [திரு. கே.டி. பச்சைமால்]

அடிப்படையில், பதிவு மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் கிராம நிருவாக அலுவலரால் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.

தொழிலாளர் துறையில் இயங்கி வரும் 17 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள் தவிர மேலும் 17 நல வாரியங்கள் பிற துறைகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டவர்களில் சிலர் ஏற்கெனவே விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்றவர்களாக இருந்ததும் கண்டறியப்பட்டது. மேலும், ஒரே நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டதும் அறியப்பட்டது. இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்கும் பொருட்டும் கிராம நிருவாக அலுவலர் மூலம் விண்ணப்பங்களில் அளிக்கப்பட்டுள்ள விவரங்களைச் சரிபார்ப்பது அவசியமாகிறது. இந்நடைமுறையினால் வாரியத்தில் போலியான பதிவுகள் ஏற்பட வாய்ப்பில்லை.

வங்கிக் கணக்கு துவங்குதல்

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நலத் திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் வெளிப்படையாக வழங்குவதை உறுதி செய்யும் வகையில், முன்னோடித் திட்டமாக, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய 6 மாவட்டங்களில் நலத் திட்ட உதவிகளுக்கான பணப் பயன்களை மின்னணு பரிமாற்றம் முறையில் பதிவு பெற்ற தொழிலாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்த அரசாணை (நிலை) எண் 102, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 8-11-2011-ன்படி ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தற்பொழுது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமைப்புசாராத் தொழிலாளர்களால் வங்கிக் கணக்குகள் துவங்குவதில் ஆரம்ப காலத்தில் இருந்த இடர்ப்பாடுகளைத் தொழிற்சங்கங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, பல்வேறு வங்கிகளுடன் தொடர்பு கொண்டு குறைபாடுகளைக் களைய தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.